



ஓலை 76 | ஓசை 199 | ஜூன் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்**
**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்**

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மையுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும்


அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

## அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

கணையின் வழியே
உயிர்க்குடிக்கும் வேடனின்
கருணையற்ற பார்வை.
/
வடித்த சாதத்தை
வறுத்து தின்றதால்
வயிற்றில் அமிலச் சுரப்பு.
/
இருட்டறையில் ஒளிரும்
கதவிடுக்கில் கசியும்
வெளிச்சம்.
/
பகலைச் சபிக்கும்
ஒருவனிடம் இரவின்
காயங்கள்.
/
சுற்றித் திரியும்
பறவையின் றெக்கையிலிருந்து
கொஞ்சமாய் உதிர்கிறது வானம்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# அன்பின் வழியது!

அன்பின் வழியில்
அருளது பிறக்கும்

அகிலம் உய்யும்
அணைப்பில் துவளும்.

அறத்தொடு வாழ
அகத்தில் ஊறும்.

இல்லறத்தில் இரண்டற
இணைந்தது அதுவே!

ஆக்கத்தைத் தந்தே
அகத்தில் நிலைக்கும்.

நல்வழியில் அறம்
நாளும் செய்யலாம்.

பிறர் வாடப்
பொறுக்காத மனம்

தேடி வருவோரைத்
தேற்றி உதவுதல்

அச்சம் அழித்து
அவலத்தைப் போக்கும்



வன்முறை அகற்றி
நன்னெறி காட்டும்.

குறையை நிறையாக்கும்
குணத்தைத் தந்திடும்.

அன்பே சிவமாம்
அன்பகல சவமாம்.

உறவுகளை மதிப்போம்
உவகையோடு வாழ்வோம்.

இரப்போர்க்கு நாளும்
கரவாது உதவும்.

அன்பொன்றே நாளும்
அகிலம் பேணும்.

அன்பை நிறைப்போம்
அகத்தில் நாமும்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர் அணை

உங்கள் வெற்றி, தோல்வியைக்
கண்டறிய மற்றவர்களின்
நாணயத்தை சுண்டிப்
பார்க்காதீர்,
/
எனது ஆயுளை
வெறும்
இதய துடிப்பல்ல.
உனது
இமைகளின் துடிப்பே
உறுதி செய்கிறது.
/
மின் கடத்தாப் பொருட்கள் போல
உன்னையும்
காதல் கடத்தாப் பொருட்களைக்
கொண்டு செய்திருக்கலாம்.
/
உனது முகத்தை
அட்டைப் படமாகக்
கொண்ட
எனது காதல் புத்தகம்
கடைசி பக்கம் வரைக்கும்
கண்ணீர்களால் நனைந்திருக்கிறது.
/
ஊர்ந்துச் செல்லும்
அந்த பட்டுப் பூச்சிகளின்
இறுதி பயணமோ
பூமி தாய்க்கு
அழுகையை
வர வைத்திருக்கும்.



இரவில் சாலையோரத்தில் தெரியும்
பச்சை விளக்குகள் எல்லாம்
ஏழைகளுக்கு இன்னும்
பசியை தூண்டுகிறது

கவிஞர் இரா. மதிராஜ்

# ஆத்தங்கரை ஓரத்திலே

ஆத்தங்கரை ஓரத்திலே
அந்திசாயும் நேரத்திலே

ஆத்தங்கரை ஓரத்திலே
அந்திசாயும் நேரத்திலே.
அடிமனசு படபடக்க
அத்தமக காத்திருக்கேன்.

பொன்னான மனசுக்காரன்
பொழுதில வந்துடறதா
சொல்லிவிட்டுப் போனானே
சொன்ன சொல்லு என்னாச்சு?

என்னயக் காக்க வச்சி
எங்கிட்டுப் போனாயோ?
ஏந்திழையின் நெஞ்சத்தில
ஏக்கங்கள் எத்தனயோ?

பொங்கிப் பாயுது
ஆத்து வெள்ளம்
பொழப்பு கெட்ட
மச்சானத் தான காணோம்.

இதயத்தில ஈரமில்லயா?
இப்படி காக்க வச்சானே?
இங்க நான் தவிக்கிறதோ
இன்னுமா ஒனக்கு புரியலியோ?




கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

17. உலக அறவி புக்க காதை

காயசண்டிகை பசி தீர்ந்தனள்

ஆதிரை இட்ட உணவு அமுதசுரபியில் விழுந்தது நல்ல நேரம்
வீதிகள்தோறும் பசியில் வாடும் மக்கள் அவளிடம் குழுமினர்
சாதி மதம் கடந்து கொடுக்க கொடுக்க பசிப்பிணி அகன்றது
பீதிஇன்றி வாழ வைத்தது மணிமேகலை அட்சயபாத்திரம்

யானைத்தீ நோய் அடங்காப் பசி அவதியில் காயசண்டிகை
பானை சோறு உண்டாலும் உடனே பசியில் துடிப்பாள் அவள்
தானாக அங்கு வந்த பசி தீர்க்கும் மணிமேகலை , கண்டாள்
வானத்து நிலவாக வந்த மேகலையை விழுந்து வணங்கினாள்



ஆருயிர் மணிமேகலையே நான் கூறுவதைக் கேட்பாயாக
பாருக்குள்ளே தின்னத் தின்ன பசி நீங்கா பாவியானேன்
ஊர்மக்களின் பசி போக்கும் தாயே என் பசி தீர்ப்பாயாக
காரிகையிடம் பசி தீர்ந்த அவள் தன்சுயசரிதை உரைப்பாள்

நான் விஞ்சையர் உலகில் காஞ்சனைபுரம் என் சொந்த ஊர்
நானும் கணவரும் பொதிய மலை அழகினைக் காணவந்தோம்
தானுண்டு தன் வேலையுண்டு என வாழ்ந்த வன் வாழ்க்கை
என் பழ வினை காரணமாக இப்படி நிகழ்ந்து விட்டது. கேளாய்

ஆற்றுமணலில் அருவியின் அழகில் மயங்கி இருந்தோம்
ஆற்றில் நீராட விருச்சிக முனிவன் நாவல் கனியுடன் வந்தார்
தேக்கிலை மீது கனியை வைத்துவிட்டு நீராடச் சென்றார்
செருக்கோடு நடந்த நான் அக்கனியை மிதித்து சிதைத்தேன்

அக்கனி பன்னிரண்டாண்டுக்கு ஒரு முறை கனியாகக் கிடைப்பது
இக்கனியை புசித்தால் பன்னிரண்டாண்டுக்கு பசியின்றி வாழலாம்
எக்கனிக்கும் ஈடாகாத நாவல் கனி சிதைந்தது கண்டார் முனிவர்
எக்காலமும் பசியோடு திரிய என்னை சபித்து விட்டார் விருச்சிகன்

என் கணவன் விஞ்சையன் நாவலந்தீவில் புகார் நகர் செல் என்றான்
தன் பசிதீர புகார் வீதிகளில் நான் அலைய பெண்ணே நீ வந்தாய்
உன் கை அமுது உண்டு நீங்க முடியாத என் பசியின் சாபம் நீங்கியது
என் ஊருக்கு இனி நான் மகிழ்ச்சியுடன் வான் வழியே செல்வேன் தாயே

மேலும் கூறினாள் இவ்வூரில் சக்கரவளாகக் கோட்டம் ஒன்று உள்ளது
நாளும் வறியோர்கள் உணவு தேடி தேடி கூடும் ஊரம்பலம் உள்ளது
சேல் மொய்க்கும் குளம் போல் பசியோடு மக்கள் நிறைந்திருப்பர்
காலந்தோறும் வாடும் அவர் பசி தீர்க்க நீ அங்கு செல் ." என்றாள்.,
( சேல் : மீன்கள் )

தொடரும்...

கவிஞர் ந. திருக்காமு

# பரந்தூர் பரப்பு

வேளாண்நிலங்கள் பறித்து
வானூர்தி நிலையம் அமைத்து
வளவன் வாழ்வை அழிக்கும்
வஞ்சகக்கூட்டம்.

திக்கற்ற உழவர்கள் தஞ்சம் தேடி
தக்கணம் செல்ல.
தாகம் தீர்க்க திறனிழந்த வேந்து .
உழவன்கண்ணீர் குடித்த பரந்தூர் பரப்பு.




கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# கத்தியாய் நீளும் வெறுப்பு

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்
யாரோ ஒரு புது மனிதனை
சந்தித்துக் கொண்டே இருக்கின்றோம்.
விதிக்கப்பட்ட வாழ்நாளில்
அதிகமாக செலவிடுவது
அந்நியர்களுடன் தான்.
பந்தத்தில் கட்டுண்ட உறவுகளுடன்
இருக்கக்கூடிய நெருக்கத்தை விட
பந்தங்களற்ற மனிதர்களோடு
இருக்கும் நெருக்கம்தான்
பெரிதாக நீள்கிறது

சண்டை, சச்சரவு,மன பேதங்களென
எது வந்த போதும்
ரத்த சம்பந்தமான மனிதர்களுடனும்
அந்தியர்களுடனும்
சமரசம் செய்து கொள்ள
போதுமான காரணங்களை
வைத்துக் கொள்ளாது
துட்சமான பார்வையைக் கொண்டே
கடந்து போய் கொண்டிருக்கிறோம்.

காரணமே இல்லாத துவேஷமும்
காரணமே இல்லாத வெறுப்பும்
தீட்டிய கத்தியாக நீண்டு
மனிதர்களையும், மனங்களையும்
கூறு போட்டுக் கொண்டே இருக்கிறது



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

நடந்து முடிந்ததை விட்டு விடுவோம்
அது மாறப்போவதில்லை என்பதை உணர்வோம்
நடக்கப்போவதை இறைவனிடம் விட்டுவிடுவோம்
அது நம் கையில் இல்லை என்பதை
உணர்ந்து கொள்வோம்
நடப்பதை நம்பிக்கையுடன்
எதிர்கொள்வோம்
இன்று
இப்பொழுது
இந்த நிமிடம் நம் கையில் உள்ளது
அந்த நிமிடத்தை சரியாக பயன்படுத்துவோம்
நன்றி இறைவா!



கவிஞர் ஜெ. தேவிராஜசேகர், சென்னை

உன் பாசம்
என்னையும்,
என் கவிதைகளையும்,
புதுமையாக்கியதால்,

நீயே என்னுடைய
புதுமைப்பித்தன்.



கவிஞர் ஜெ. சுரேகா, திண்டுக்கல்

# நானே ராணி

என்னை விரட்டியவர்கள் முன்
திமிராக எழுந்து நின்று
வெற்றி வாகை சூடுவேனே
அப்போ நான் ராணி

அவமானப்படுத்திய கூட்டம் நடுவே
அவதாரம் எடுத்து எழுந்து சாதிப்பேனே
அப்போ நான் ராணி



கேவலம் என்று ஒதுக்கிய
சமூகத்திற்கு மத்தியில்
புகழ் கோலம் போட வைப்பேனே
அப்போ நான் ராணி

வலிகளை கொடுத்து
இருட்டிட வைத்த வாழ்க்கைக்கு
தீயாகி வெளிச்சம் ஊட்டுவேனே
அப்போது நான் ராணி


முதுகில் குத்தியவர்களுக்கும்
நான் உயர்ந்து அன்பால் அரவணைப்பேனே
அப்போ நான் ராணி

என்னை கேவலப்படுத்திய
நண்பன் விழும் போது
கைதாங்கலாய் நான் தாங்குவேனே
அப்போ நான் ராணி

என்னை அவமானப்படுத்தியவன் அழுகையில்
ஆறுதலாய் இருப்பேனே
அப்போ நான் ராணி

கவிஞர் ஜஸ்ரா ஜலீல்

மதுவை குடிக்கும் முன் உன்
குடும்பத்தை நினைத்தாயா மானுடா உன்
வாழ்வு எப்படி சீரழிகிறது யோசித்தாயா
சிந்தித்துப் பார் உனது குடும்பம்
நடு தெருவில் நிற்குமே குழந்தைகளின்
நிலைமை என்ன என்பது தெரியாதே
பாடுபட்ட பணம் டாஸ்மார்க்குப் போக
உனது குடும்பம் எங்கேப் போகும்
மதுவை குடித்து விட்டு கும்மாளம்
போடுவதை விட்டு விட்டு மாற்று
பாதையை நோக்கி பயணம் செய்
ஞாபகம் வந்தால் உலர் திராட்சை
எடுத்திடு வாழ்வு வளம் பெறும்



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# அலைபேசியால் தொடரும்



அலைபேசியால் தொடரும்
அழியாக் காதலே

அன்பாய் பேசினோம்
கைபேசியின் துணையாலே

ஆசைகளைப் பரிமாறினோம்
ஆனந்தத்தில் திளைத்தோம்

இதயத்தால் இணைந்தோம்
இனிமையும் வந்தது

உணர்வினில் கலந்தோம்
உற்சாகம் பிறந்தது

ஊஞ்சலானது மனது
ஊடலில்லாக் காதலால்

எங்கே இருக்கிறாய்
என்னவளே வந்துவிடு

ஏக்கத்தில் தவிக்கிறேன்
ஏந்திழையே அருகில்வா

ஐயம் வேண்டாமே
ஐக்கியமாவோம் நாமே

ஒன்றானது உள்ளம்
ஒருபோதும் விலகாதே

ஓராயிரம் நினைவுகள்
ஓசையாய் எழுகிறதே

இரவும் இம்சையானது
பகலும் பரிதவிக்கிறது

விடியலும் உன்னைத்
தேடுகிறது அன்பே

பாவையே உனது
உரையாடலில் கனிந்தேன்

சிரிப்பினில் சிதைந்தேன்
நெஞ்சத்தில் நிறைந்தேன்

வாழ்வின் வரமாய்
இணைந்திடு கண்ணே

அலைபேசியால் தொடரும்
அழியாக் காதலே.

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# வேர்களும் கிளைகளும்

விஷ வேர்களை
வெட்டாமல்
கிளைகளை
செதுக்குவதில்
கிடைப்பது என்ன?

சமூகத்தை பண்படுத்துபவர்களுக்கு
வழங்கும்
பணமுடிப்பை விடவும்
சமூகத்தை புண் படுத்தியவர்களுக்கு
வழங்கும் பொற்காசுகள்
கூடி இருப்பதில்
கழிந்திருப்பது என்ன?

பிணங்கள் எரியும்
கொள்ளிக்கட்டையில்
பீடி பற்ற வைத்து
புகைக்கும்
மனநிலையின்
மாயம் என்ன ?

தோட்டத்தில்
கருகிய செடிகளை எல்லாம்
சீர்தூக்கி பாராமல்
விஷ செடிகளின்
வேர்களுக்கு மட்டும்
நீரூற்றுவதில்
இருக்கும்
நெருப்பு என்ன?



கவிஞர் ஈசு, உடுமலை

# நம்பிக்கை

நாளும் கோளும் தூர நின்றாலும்
நம்பிக்கை உன்துணை நிற்கும்!
ஆளும் அன்பும் அருகில்லை என்றால்
ஆதரவாய் வந்து தோள்கொடுக்கும்!


வாளும் வேலும் வீழ்த்த வந்தாலும்
வீழாமல் உனைக் காத்து நிற்கும்,
நீளும் வாழ்வில் நிழலெனத் தொடர்ந்து
நம்பிக்கை உனை வாழ வைக்கும்!

கடவுள் மனிதன் நம்பிக்கை- அது
காத்திடும் என்ற நம்பிக்கை.
கட்டில் உறவில் நம்பிக்கை- அது
கணவன், மனைவியின் நம்பிக்கை.

நல்லவன் நீ எனும் நம்பிக்கை-உன்
நடத்தைப் பண்பின் நம்பிக்கை,
எல்லார் மீதும் நம்பிக்கை - உனை
ஏமாளி யாக்கும் நம்பிக்கை

சொல்லில் அன்று நம்பிக்கை,- சொல்
மாறா நடப்பது நம்பிக்கை.
உள்ள வெளுப்பே நம்பிக்கை - அது
உயிரையும் தந்திடும் நம்பிக்கை.

காலம் கனிந்திடும் நம்பிக்கை- இது
கைகள் மீதின் நம்பிக்கை,
ஞாலம் உய்யும் நம்பிக்கை- இது
நல்லவர் நாம் எனும் நம்பிக்கை.



கவிஞர் திருமதி இரா. இராஜாமணி, ஈரோடு

அன்றோர் பரணி பாடினான்
செயங்கொண்டார்
ஆயிரம் யானை கொன்றானை.

1. பரணி.
இன்றோர் பரணிபாடுவேன் நானும்
ஆயிரம் புத்தகம் தந்தானை.

2. கண்ணப்பன்
கல்லான கடவுளுக்கு
கண்வைத்தான் கண்ணப்பன்.

கண்வாங்கிக் கொண்ட கடவுள்
குருடனாகவே வைத்துவிட்டான்
பல கண்ணப்பர்களை.

கேட்டாள் பதப்புகிறார்
முற்பிறவி வினையென.

இல்லாத கடவுளுக்கு கொடுப்பதற்கு
இல்லாத ஏழையிடமே புடுங்குகிறான் வரிகளை.

3. இறைவன்.

இறையெனும் பெயரில்
வரிவாங்கினான் மன்னன் அன்று.

இறைவன் என்ற பெயரில்
இரவல் கேட்கிறான் கடவுள் இன்று.

4. சுதந்திரம்.

தனியே படுத்தழுது
தலையனையை நனைக்கிறேன்.
நான்கு சுவர்கள் தருகிறது சுதந்திரம்.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# சுமக்கிறேன் உன்னை

உயிருடன்
இன்றில்லை
உன்னை சுமந்த தாய்
சுமக்கிறேனடா உன்னை
வாழ்க்கை முழுவதும் - என்
ஒற்றைக் கையில்



கவிஞர் குட்டிமா தேவி ஸ்ரீ, விருதுநகர்



ஏழை வீட்டில் பிறந்தது தவறா?
ஏழ்மை இங்கு வந்தது தவறா?
வறுமைப் போக்க வாழ்வது தவறா?
வாட்டி வதைப்பது ஆணவத்தின் திமிரா?

படிக்கும் வயதில் குடும்ப பாரம்
எட்டாக் கணியாய் கல்வி தூரம்
செங்கல் சூளை உணவுச் சாலை
சிறார்க்கு இதுவே சிறைச் சாலை

உணவும் உடையும் பற்றாக் குறையாய்
அவனும் ஓடாய் தேய்கின்றான்.
வியர்வைத் துளியை மண்ணில் விதைத்து
மலராத மொட்டாய் நிற்கின்றான்

குடும்ப வறுமையை சுமர்ந்து நின்று.
மாடாய் அவனும் உழைக்கின்றான்
குற்றம் சொல்லி உழைப்பை சுரண்டும்
சுற்றத்தாரிடம் சிக்கு வுண்டான்.

ஆட்டம் போடும் பருவத்தில்
இங்கு ஆடிப் பாடித் திரிவதில்லை
பாத்திரம் கழுவிப் பணி செய்யும்
பதைக்கும் பறிதவிப்பை வந்து பாரிர்

அதிகாரத் திமிர் படைத்தவர்களே
அதிக்கம் செலுத்த நினைப் பவர்களே
ஒருநாள் உழைக்கும் கைகள் ஓங்கிநிற்கும்
உரு குலைந்து ஓட வைக்கும்

கையிரல் காயம் மாறுத்துப்போச்சு
உழைத்து உழைத்து களைத்து போச்சு
கையில் காசு எங்கே போச்சு
பையில் போட்டால் தொலைந்து போச்சு

சிட்டாக நானும் பறக்க ஆசை
பட்டாக நானும் பலபலக்க ஆசை
மொட்டான நானும் மலர்ந்திட ஆசை
பட்டடரத்தில் தேடியது என் நற்பாசை

தேடித் தேடி அலைகிறேன்
தேடிய எதிர்காலம் கிடைக்கவில்லை
என்னைத் தேடி அலைந்து அலைந்து
தொலைந்து போனது என் வாழ்வு

ஏழை வீட்டில் பிறந்தது குற்றமா
ஏழ்மையை போக்காத அரசின் குற்றமா
பிள்ளை நானும் தவிக்கின்றேன்
வறுமை ஒழிக்க நினைக்கின்றேன்

கவிஞர் ஆதி. சுப. சரவணன், புதுச்சேரி

எச்சம் இடுவது
உங்களுக்கு
அசூசையாக இருக்கலாம்
எச்சம் இடுவது
பறவையைப் பொருத்தமட்டில்
நன்றிக்கடன்!

மரமும் பறவையும்
வேறு வேறு
ஆனால் நேசித்தலில்
தொப்புள் கொடி உறவு!



கவிஞர் மரு ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# நூற்றாண்டு மனிதர்கள் எதிர்காலம்



இகழ்ச்சிகளே புகழ்ச்சிகளாக
இக்கரையில் அக்கரையை குறை பேசி
இங்கே அங்கே என பச்சோந்தியாக மாறி
இங்கீதமில்லா தலைமுறையாக

இடியாகவே பிறரைத்தாக்கி
இட்ட கடனையும் நன்றி மறந்து
இடரில் உள்ளவர்களை படமாக காட்டியே
இசையுமே நாரசமாக

இடரிவிட்டு கேளிக்கைகளாக பிறர் வலியும்
இதமென்பதே சுயநலமாகவே
இதுஅதுவென உறவுகளை தள்ளிவைத்து
இப்போ என்ன அதற்கு என அலட்சியமாகவே

இருக்கும் உறவுகளை துறந்துவிட்டு
இணையவழியாகவே வாழ்வை நகர்த்தி
இதிகாசம் படைப்பதாய்
இழிவான செயல்களிலே இறங்கிட்டு



இம்மியளவும் பயமின்றி
இயல்பான மனித குணம் தொலைத்திட்டு
இயற்கையையும் துவம்சம் செய்து
இருக்க மண்ணில்லாமல் கல்மேடாக்கி

இல்லாத சுகத்திற்கு
இறக்கைக்கட்டி பறந்தே
இனிதான் வாழ்வுதனை காசுக்காக
இளப்பாமாக அடகு வைத்து

இரண்டாயிரத்து நூறாம் ஆண்டு மனிதர்களும்
இழுத்து பிடித்து நகர்ந்திடுவரே!

a

கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்

இந்த உலகம் எங்கும் வியாபித்திருக்கும்
உறவுகளுக்குள் இனிமை சேர்த்திடும்
சுயநலமாய் சிந்திக்காது.

கட்டுண்டவர்களால் விடுபட முடியாது
தன்னலமில்லாமல் சேவை புரிந்திடும்.
கண்ணீரில் கரைந்து விடும்.

வான்கொடையாய் மண்ணுக்குள் இறங்கும்
மழைநீர் போல் தூய்மையானது.

கள்ளமில்லா மழலையின் சிரிப்பாய்
காண்போருக்குக் கடத்திடும்.

மன்னிக்கின்ற தன்மை உண்டு
எதிர்பார்ப்பின்றி, பாரபட்சம் பார்க்காமல்
பிரபஞ்சத்தின் மூச்சுக்காற்றாய்
இவ்வுலகமெங்கும் நிறைந்திருக்கும்.

அன்பு என்ற ஒற்றைத் தவிர
வேறெந்த சொல் அவனியில்
உயர்ந்த சொல்லாய் இருந்திட முடியும்?




கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

சக்கரையா நாயினிக்க
சங்கதிகள் சொன்னவுக
பக்கத்துல இல்லாம
பாவியிவ தவிக்குறேனே

ஏக்கத்துல மனசுந்தான்
ஏவுகணை ஏவுதையா
தாக்கத்துல வயசுந்தான்
தரிகெட்டுப் போகுதையா

உள்ளத்துல ஒறைஞ்சகாதல்
உசுருல இருக்குதையா
வள்ளத்துல துடுப்பின்றி
வழியற்று கிறங்குதையா

வக்கணையாத் தின்னாம
வாடிக் கிடக்கிறேயா
நாக்கும் செத்துத்தான்
நாலுமாசம் ஆச்சுதையா

சொக்கனுக்கு சுந்தரியா
சோடியா இருந்தோமையா
திக்குத் தெரியாம
தெகைச்சி நிக்கிறேயா



அக்கறையா அனுப்பிய
ஓங்கடதாசியால பூத்திருக்கேயா
இக்கரையில நாயிருந்து
ஒனப்பாத்துக் காத்திருக்கேயா

கவிஞர் கிருஷ் அபி

தர்மமே கண்ணாய் கடமையாற்ற ஓர்மனிதன்
கல்விக்கண் திறக்க *கடவுளாய்* வந்தாரே.

காலநேரம்பார்காமல் மக்கள்சேவை ஒன்றையே
காலமெல்லாம் செய்தாரே

ஆறுகுளம் ஏரிஎன அவர்காலத்தின் வளமைதான் இன்றுவரை
நீர்தரும் உயிர்ஆதாரம் உண்மையே

நாட்டின் முதுகெலும்பான விவசாயம் செழிப்புடனே தழைத்திடவே
அணைகள்பலகட்டி அற்புதம் படைத்தாரே

ஏழை குழந்தைக்கு சீருடை கல்வியோடு மதிய உணவு படைத்திட்ட
அட்சயபாத்திரம் *கர்மவீரர்*

தேசத்தின் விடுதலைக்கு பெரும்பகுதி வாழ்வையே
சிறைச்சாலைக்கு தந்தாரே



வெள்ளையனின் பார்வையில் அவர்ஒரு
தென்னாட்டு *காந்தி*யென புகழோடு வாழ்ந்தாரே

எளிமையான வாழ்வாளே எளியவர்களின் கடவுளாய்
இதயம்கவர்ந்த தலைவராக நூறாண்டுகடந்தாலும்
மக்களின் நெஞ்சங்களில் என்றும் *வாழும்தெய்வம்* அவர்

கவிஞர் ஜேபிபி@ பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

# வலிகளைக் கடந்திடு

வலிகளைக் கடந்நது வா
தொனிகள் மாறினாலும்
விழிகள் கலங்கினாலும்
கடந்து வா

அற்பப் பொருளென
நசிக்கிடதான் வேண்டுமோ
வலிக்கு வலிகளின் போது
சுளிக்கும் முகத்தோற்றம்

தெரிந்திடா கேள்வியிலும்
கேட்டு விட துடிக்கும்

வலித்திடுமென்றே விட்டுவிட்ட நேரம்
விஷமமாகவே புன்னகைத்து சிரிக்கும்

யாரிந்த மானிடமோ ?
சடங்கு சம்பிரதாயமில்லையோ? என
கேள்வி தொடுத்தால் சீறிப்பாயும் மனிதா!

வலிகளுக்கு இனமதமுண்டோ !
துப்பட்டா போட்டு மறைத்தாலும்?
மறைவில் அடங்கிடுமோ
அடக்கம் செய்திட முடியுமோ?

ஒழிந்து வாழமுடியுமோ
இந்த வலிகள் ஒழிந்திடுமோ
நெலிந்துக் கொண்டு வருமோ?



கவிஞர் சுஹ்னாஸ் பேகம், புத்தளம், இலங்கை

# ஏகாந்த வேளை

ஏகாந்த வேளையிது
அந்தியின் ஆரத்தியில்
அழகுமேகங்களின் ஆனந்தராகம்

குளிர்ந்த கானமும்
குழலூதும் தென்னையும்
தெம்மாங்கில் காற்றும்
சிரித்த மேகமும்

மனதிலே சாரல் மழையின் ஸ்பரிசம்
அழைப்பு மணியோசையும்
ஆர்வத்தில் விழிகளும்

கூடிக்கழித்த நாட்களை
மீண்டும் அழைக்கும் மனதும்
எட்டி எட்டி பார்க்குது

செல்லமாய் ஒர் சிரிப்பில்
வெல்லக்கட்டி மணமும்
ஆச்சரியமே அவள் ஒரு நவரச
நாயகிதான் அன்பிற்கினியாள்

நிற்காத கால்களின் சலங்கை
சத்தம் வாய்கொள்ளாத பேச்சின்
வடிவழகில் கீதமிசைப்பாள்
பைங்கிளியாள்



ஆழ்ந்த அகன்ற பேச்சும்
அனுபவத்தின் அழகியலும்
வஞ்சிமகளின் அலசலில்
எண்ணங்களின் சங்கமம்
வண்ணம் குழைத்து போனது

பேரின்பமே
நட்பெனும் நதியில்
நனைந்தோடிய பொழுதுகளை
ஏகாந்தமிசைத்து மன ஏட்டிலமர்ந்து
மகிழ்ந்து மகிழ்ந்து
மணம் வீசித் திரியுது

மௌனம் கூட கலகலத்தது
தன்னை மறந்த தோழிகளின்
ஏகாந்தத பொழுதினை தீண்டாது
எட்டி நின்ற வாழ்த்தியது

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி (நாகை மாவட்டம்)

# ஊமை நெஞ்சம்

ஊண் வளர்த்தும்
உயிர் வளர்த்தும்
உற்றதெது வென உணரேன்


ஊறு செய்யா நெஞ்சில்
உளறித் தீரா தெதுவும்
ஊமை நெஞ்சின்
உற்ற துணையாய்

உமை வேந்தே
உனைத் தேடி தினம்
உளறித் தவிக்கும்

உணராதோ எம்மொழி
உரையாதோ செவிவழி
உற்றுக் கண் பாராய்

உடுக்கை இரைச்சலில்
உன்செவி விழலியோ
உதவிடும் நோக்கே
உனைக் கில்லையோ

உலர்விழி மட்டும்
உனை நினைத்து
உறக்கம் தொலைத்து
உளறிக் கிடக்குது!



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# காடுகள்

பச்சைக் காடுகளை எல்லாம் அழித்து
இச்சை தீர்த்துக் கொள்ளும் தீயவர்
உச்சி மீது வானிடிந்து வீழட்டுமே.

மெச்சி மெச்சி காடுகளை வளர்ப்போர்
அச்சம் நீங்கி இயற்கையைக் காத்தே
உச்சம் தொட்டு உலகில் வாழட்டுமே.

காட்டு உயிர்கள் பலவும் இன்று
சீட்டுக் கட்டாய் சிதறி ஓடிட
வேட்டு வைத்திடும் கயவர் கூட்டம்

ஈட்டிடும் செல்வம் எல்லாம் நாளும்
ரோட்டில் பயனற்று வீணாய்ப் போகட்டுமே
சிட்டுக் குருவிகளாய் அவர்வாழ்வு சிதையட்டுமே.



கவிஞர் கவி. செங்குட்டுவன், ஊத்தங்கரை

# திரும்பிப் பாராயோ

விரும்பி வாராயோ
வியந்து பாராயோ
திரும்பி பாராயோ
தேன்தமிழ் தாராயோ

தித்திக்கும் தேனமுது
திசையெட்டும் ஆள்வது
சித்திக்கும் மந்திரமது
சிந்தையில் நிற்பது

முத்திக்கும் வழிக்காட்டும்
முத்தான முத்தது
முத்தமிழ் சுவைதானே
மூத்தோர் மொழிந்தது

தத்தையே கேளாய்
நித்தமும் மகிழ்வே
வித்தைகள் விளங்கும்
வியனுலகு வாழ்த்தும்



கவிஞர் சே. இலட்சுமணக்குமார், ஈரோடு

முடிவு
உங்களுடையதாய்
இருக்கும் போது
தவறானவையை
எண்ணிக்
கவலை கொள்வதில்
பயனில்லை



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# புகைப்படக் கருவி

கண்ணடித்த பாவத்தினால்
கர்ப்பிணியானேன்
என் கட்டழகை ரசித்தவரை
பெற்றெடுத்தேனே



கவிஞர் அ. தனசேகரன், அருள்வாடி விழுப்புரம் மாவட்டம்

# தியானம்

தனிமையிலும் இனிமை காண்பது உண்டே!
இனிது இனிது ஏகாந்தம் இனிது
இரைச்சல் இல்லா பிரம்ம முகூர்த்தமே
தியானத்தில் இனிமை சேர்த்திடுமே!
தியானத்தில் அமர்தலே சுகந்தமே!
இன்னலை நீக்கி இன் பதத்தில் ஆழ்த்தி
நம்மை முக்திக்கும் வழிகாட்டுமே!
மானிடராய் பிறந்து மகான்களாக ஆக
நம்மை ஆட்கொள்ளுவதும் தியானமே!
பேசும் திறன் உள்ள மனிதனே
வாழ்க்கையில் மேன்மையை அறிவானே!
மூன்றாவது கண் என்று சொல்லும் புருவ மத்தியில்
மனதை செலுத்தி கண் மூடி ஒரு முகமாக அமர
வந்துடுமே தியானமே!
ஆயிரம் என்ன அலைகள்தான் வந்துதான் போகுமே!
இதனால் கிடைத்திடுமே ஆன்ம ஞானமே!
முற்பிறவியில் நடந்த இப்பிறவியில் நடக்க
எதிர்காலத்தையும் அறியலாமே!
மனமும்தான் செம்மையாகுமே!
நம் வாழ்வில் மாற்றங்களும் வந்திடுமே!



கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி ஊத்தங்கரை

# கண்ணீர்

பெருந்துக்க உருண்டைகளை
மெல்ல விழுங்கும்
வலிகளின் நிவாரணிகள்
இந்த கண்ணீர் துளிகள்.

உள்ளப் புழுக்கத்தின்
வியர்வை துளிகள் தான்
இந்த கண்ணீரோ.

யாரோ இல்லாமல்
தேடிப்பார்க்கிற
தவிப்புகளின் முனைகளில்
உயிர் விடுகிறது.

பிடித்த ஒருவருக்கு
பிரிந்த ஒருவருக்கு
வெறுத்த சிலருக்கு
அணைத்த
உனக்கு எனக்கு என
எத்தனை பேர்களை
சொல்லி விடுகிறது
கண்ணீர்!

மனம் உறிஞ்சி
உமிழ்ந்த
எச்சில் இவை.

எந்த நினைவுக்
கொதிகலன்களில்
வெப்ப நீரிதுவோ



நீர் விழுதுகளில்
ஊஞ்சலாடும்
நினைவுகள்
உயிர் விட
அதே கண்கள்
கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.

இலையுதிர் கால
மரங்கள் போல்
உதிர்த்து தள்ளுகிற
நீர் மொட்டுக்களை
நினைவுக் கயிற்றினில்
தொடுக்கிறேன்.

கவிஞர் கோ. டோன்குமார்

# முரண்பாடு

புகைப்பது தீது என்பார்!
புகைக்கச் சிறந்ததென
விளம்பரம் செய்திடுவார்!

குடிப்பது உடலுக்குக் கேடு என்பார்
குடித்து அழிந்திடவே
கடைகளைத் திறந்திடுவார்!

சாதிகள் இல்லை என்பார்!
சாதிகள் பெயராலே
சலுகைகள் பல செய்திடுவார்!

எல்லாமே முரண்பாடு!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

# நெய்தல் - துளிப்பா

கடலினுள் வளங்கள்
என்றும் நிலைத்திருக்கும்
சிற்பிக்குள் முத்து
□
கடலில் மீன்கள்
எல்லைகள் அறியாமல் செல்லும்
ஆளில்லாப் படகுகள்
□
ஆழிப் பேரலைகள்
வரும்போது வந்து விடும்
அழிவுகளின் நினைவுகள்
□
மறையும் சூரியன்
சிவப்பு நிறத்துடன்
மாலையில் கடற்பரப்பு
□
கலங்கரை விளக்கம்
தூரத்தில் தெரிகிறது
விடிவெள்ளி



கவிஞர் சே.ரா. ஸ்ரீதரன், இலங்கை


மூச்சு முட்டி
நிலம் ஜெயிக்கவே
விதைகள்
மண் மூடப்
பொறுக்கின்றன

பூக்களை
பறிக்கும்போது
செடிகள்
மன்னிக்கின்றன

வீட்டு மரமும்
காட்டு மரமும்
பொது மழையை
கொடுக்கின்றன

வேர் உறிஞ்சும்
நீரின் தன்மை
உவர்ப்போ கசப்போ
கனிகள்
தித்திக்கின்றன

முளைத்தல் துவங்கி
முடிவு வரை
கற்றல் தொடர்கிறது
மரம் எனும் ஆசான்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# நான் நானாக இருக்கிறேன்

இப்போதெல்லாம் அப்படித்தான்.
ஈடுபாடில்லை , பிடிப்பும் இல்லை,
எனக்காக ஒன்றை வலிந்து கேட்பதை
நிறுத்துவிட்டேன்.

அது எவ்வளவு பிடித்தமானாலும் சரியே!
இப்போதெல்லாம் அப்படித்தான்
நான் சரியாக இருப்பதில் ஒரு பெருமிதம்
எனக்கு!

எந்த எதிர்பார்ப்பும் இன்றிய பெருமிதம்!
அவ்வப்போது பழைய வடுக்கல் கண்ணீரால்
உராய்ஞ்சப்பட்டு எரிகிறது,
பரவாயில்லை சுதாகரிக் கொள்கிறேன்.

ஒரே ஒரு வேண்டுகோள்
நான் அப்படியே தான் இருக்கிறேன்
நாவில் இனிப்பில்லை என்றாலும்
உப்பை என்மீது கொப்பழிக்காதீர் !



கவிஞர் முஜீபா, இலங்கை

# தகப்பன்சாமி!

தம்மைவிட தம்மக்கள் முன்னேற்றம் காண
தன்னலம் கருதாது உழைத்திடுவார் அப்பா!
அள்ளிக் கொஞ்சிய, அரவணைத்து மகிழ்ந்த
வலியில் துடிக்கும்படி அடித்து அழவைத்த
எல்லாத் தருணங்களும் கண்முன் நிற்கிறதே!
பள்ளி, கல்லூரிகளில் படிக்க வைக்க
உளமகிழ்வோடு உழைத்துத் தேய்ந்த உத்தமர்!
கண்டிப்பு காட்டியதும் தண்டனை வழங்கியதும்
தன்பிள்ளை நல்லவனாய்த் திகழ்ந்திட வேண்டுமென்ற
அன்பின் மிகுதியால் என்றறிந்தோம் பின்னாளில்!
துன்பங்கள், துயரங்கள் அனைத்தையும் தாங்கி
தன்மகனுக்கு உலகத்தைக் காட்டி உணர்த்தியவர்!
எளிமையாய், வறுமையிலும் வலிமையாய் வாழ்ந்தவர்!
தானுயராமல் ஏணியாய் நின்று உயர்த்தியவர்!
தந்தையென நானும் மாறிய பின்னர்தான்
உன்னருமையை இன்னும் மேலாக உணர்கின்றேன்!
என்னவென்று உந்தன் பெருமைகளை எழுதுவது?
வார்த்தைகள் கோர்வையாய் வருவதைக் காட்டிலும்
பெருகிடும் கண்ணீர் விழிகளில் வழிகிறதே!
இருக்கின்ற போதே அருமைகளை உணர்ந்து
கொண்டாடத் தவறிடும் உறவுகள் பட்டியலில்
அப்பா அனேகமாய் இடம்பிடித் திருப்பாரே!
என்னை வருடி என்வலிகள் போக்கிட்ட
உந்தன் கருணையை உணராமற் போவேனோ?
அன்றாட நிகழ்வுகளில் ஏதோவொரு தருணத்தில்
உந்தன் நினைவலைகள் உள்ளத்தில் தோன்றிடுதே!
என்னோடு தங்கி நீயிருந்த நாட்களெலாம்
பொன்னாளாய் எண்ணிப் பூரிக்கும் எனதுள்ளம்!
அந்நாள் இனிமேல் வாராதே என்செய்வேன்?
என்றும் உள்ளத்தில் உனையிறுத்தி வணங்கிடுவேன்!
நன்றான வாழ்வமைய ஆசியினை அளிப்பாயே!
அனைவருக்கும் அப்பாக்கள் வணங்கிடும் சாமியன்றோ!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

இந்த இரவும் கொஞ்சம்
களவு போனது
ஆழப் புதையும்
உந்தன் நினைவுகளில்.



கவிஞர் சு. இராஜ்குமார்

நகர்ந்து செல்லும் நேரத்தில் கடந்து செல்லும் நாம்
ஆயிரம் நிலைப்பாடுகளை தினம் தினம்
கற்றுக் கொண்டும் பெற்றுக் கொண்டும்
வழி வலியோடு வாழ்க்கை என்னும் கூர்முனை
கோண வண்ணத்தில் மன குழப்பத்துடன்
வறுமையின் விழியில் அடிமை என்னும்
ஆக்கப் பிணைப்பில் அறம் தவிர்த்து புறம்
புன்னகைக்கு இடமில்லாமல் புரியாத புதிராய்
வாழ்க்கை வட்டத்தை நாம் சுற்றி தான் வருகிறோம்
ஒரு நாள் அதை விட்டு வெளிவர முயற்சி
என்னும் நம்பிக்கையின் கரங்களை கைவிடாமல்
நேர்மையின் வழியில் நம் ஆயுதம் என்னும்
பாதை சரியானதாகவே நம் விழிகள்
அதைத்தொடர்ந்து
பயணிக்க தடம் பதிப்போம் தடையில்லாமல்.



கவிஞர் ம. செல்லமுத்து, நூத்தப்பூர்

# செலவில்லா எனது திருமணம்

தாலி செய்ய கூலி கொடுக்கும் செலவு நான்
வைத்ததில்லை.

கணையாழி மாற்றிடும் கல்யாணச் செலவு
வைத்ததில்லை.

தந்தியடித்து யாருக்கும் பந்திவைக்கும் செலவு
வைத்ததில்லை.

ஊரைக்கூட்டி ஊர்வலம் போகும் செலவும்
வைத்ததில்லை.

ஊரார் பேரார் உணவில் உப்பு, புளியில்லயென குறை சொல்ல
வைத்ததில்லை.

ஆதனம், சீதம் என்று பேசி அவஸ்தைகள்
கொடுத்ததில்லை.



கல்யாணப் பெயரில் இருவீட்டாரையும் கணக்குப்பார்க்க
வைத்ததில்லை.

காதலித்த காரணத்தால் யாருக்கும் பெரும் கஷ்டம்
கொடுத்ததில்லை.

காலத்தால் வந்த விதியென்று பெற்றோரும் மற்றோரும் உணர
வைத்ததில்லை.

காதலென்ற சொல்லால் இருவீட்டார் சம்மதத்துடன்
கடுதாசியில் கையொப்பமிட்டு கரம்பிடித்தேன்
என்னவளை.

கவிஞர் கோ. கோகுலநாதன், நெல்லிக்காடு (மட்டக்களப்பு

## நூல் அனுபவம்

**மறக்கப்பட்ட விடுதலைப் போராளி சாவித்திரிபாய் பூலேவின் வாழ்வும் போராட்டமும்**




தொகுப்பாசிரியர்கள் பிரஜ் ரஞ்சன் மணி
பமீலா சர்தார்
தமிழில் வெ.கோவிந்தசாமி

வெளியீடு பரிசல் புத்தக நிலையம்
முதல் பதிப்பு அக்டோபர் 2021
பக்கம் 110 ; விலை ரூ 120

நவீன இந்தியாவின் முதல் பெண் ஆசிரியர் மக்கள் கல்வியின், பெண் கல்வியின் தீவிர ஆதவாளர் பெண் விடுதலையின் பாதுகாவலர் அரசியல் கலிதையின் முன்னோடி ஆதிக்க சாதிகளையும் ஆணாதிக்கத்தையும் எதிர்த்து நின்ற துணிச்சலான மக்கள் தலைவர் என்ற தகுதிகளுக்குப் பெருமை சேர்த்த சாவித்திரி பாய் பூலே பற்றி பலரின் கருத்துகளும் சிந்தனைகளும் தொகுப்பாகி இந்நூலின் வழியே நமக்கு வழிகாட்டுகிறது

உலகத்தை மனிதநேயம் மிக்கதாகவும் அன்பு நிறைந்ததாகவும் எல்லோரும் சக மக்களின் மீது நம்பிக்கை கொண்டவராகவும் மாற்றுவதன் அவசியத்தை உணர்ந்து அதை எளிமையான வழிகளிலும் வலிமையான எண்ணத்தாலும் நிறைவேற்றிக் காட்டியவர் சாவித்திரி பாய் பூலே அவர்கள்.

பெண் சாதிய ரீதியிலும் ஆணாதிக்க ரீதியிலும் இரட்டை அடிமைத்தனத்தில் சிக்கிக்கொண்ட சூழலில் கல்வியும் போதிய விழிப்புணர்வும் இல்லாத அவர்களை இனம் கண்டு கல்வியின் அவசியத்தை அவர்களுக்கு உணர்த்திக் காட்டி வாழ்வு முறைகளை மாற்றிக் காட்டியவர். சாதிய அடக்குமுறையையும் ஆணாதிக்கப் போக்கையும் மாற்றியமைப்பதே தனது லட்சியமெனக் கொண்டு அதை செயல்படுத்தியும் காட்டியவர்.

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

தனது செயல்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்புக் கொடுத்த தன் கணவர் ஜோதிபா பூலேவுடன் இணைந்து உண்மையான மதம் என்பது சாதியத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் அப்பாற்பட்டது என்பதை சமூகத்திற்கு புரிய வைத்தார்.

விதவைப் பெண்களுக்கு மறுவாழ்வு வழங்குதல் ஆதிக்கச் சாதியினரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் சாதி மறுப்புத் திருமணம் செய்வித்தல் தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த மக்களைக் காப்பாற்றுதல் அதற்காக தனது உயிரையே இழக்க நேர்தல் என சமூகத்தில் பொதுநலத்தை மட்டுமே உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்ட தியாகியின் வரலாற்றை பல்வேறு ஆளுமைகள் வழியே தொகுத்திருக்கும் இந்நூலின் மூலம் அன்றைய இந்தியாவின் சமூக அவலத்தையும் ஏற்றத்தாழ்வுகளையும் உணர முடிகிறது.

மகாராஷ்டிராவில் மதமும் அரசியலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைத்திருந்த காலகட்டத்தில் பார்ப்பனீய நிலப் பிரபுக்களின் ஆதிக்கப் போக்கில் சாதிய ஒடுக்குமுறைகள் மலிந்திருந்த சூழலில் பூலே தம்பதியினரின் முயற்சியும் உழைப்பும் மிகப் பெரிய தடைக்கற்களைத் தாண்டி சமூகத்தை முன்னோக்கி நகர்த்திட உயிரூட்டியது.

1848ம் ஆண்டு பூனேவில் ஒன்பது மாணவிகளோடு தொடங்கப்பட்ட பள்ளியில் சாவித்திரிபாய் தலைமையாசிரியராக பணியேற்கிறார். சூத்திர அதிசூத்திர சாதியினருக்கு விழிப்புணர்வும் கல்வியும் வழங்கிட வேண்டி அவர்களுக்காக தனிப்பள்ளியை ஏற்படுத்திய அவர் தனது செயல்பாடுகளில் பலவித இடர்பாடுகளில் மாட்டிக்கொண்டாலும் விடாமுயற்சியாலும் சமூகத்தின் மீதான அக்கறையினாலும் தனது லட்சியத்தை நோக்கி தீவிரமாக உழைப்பில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறார்.

ஒவ்வொரு நாளும் சாவித்திரி பாய் பூலே மீது ஆதிக்க சாதியினர் சேற்றையும் மலத்தையும் அள்ளி வீசினர்.பல்வேறு இடையூறுகளை அவருக்கு ஏற்படுத்தி நாளும் அவரை இழிவுபடுத்துகின்றனர்.கல்வியை மக்களுக்கு வழங்கிட எவ்வித ஊதியமும் இல்லாமல் மனமுவந்து தன்னை அர்ப்பணித்துக்கொண்டு பெண் கல்வியின் வளர்ச்சியே சமூகத்தின் சூழலை மாற்றக்கூடியது என்பதில் உறுதியேற்றுக்கொண்டு செயல்பட்டார்.

திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

பற்பல நூற்றாண்டுகளாகக் கல்வி பார்ப்பனர்களின் ஏகபோக உரிமையாக இருந்துவந்த பண்டைய இந்திய சமூகத்தில் உழைக்கும் மக்களுக்கான கல்வியைத் தடுத்து நிறுத்தி அவர்களை ஒடுக்கவும் அடிமைப்படுத்தவும் வாழ்க்கை மீதான அவநம்பிக்கையை விதைக்கவும் கல்வியை ஓர் ஆயுதமாக மேல்தட்டு வர்க்கம் பயன்படுத்திவந்த சூழலில் தாங்கள் ஆதரவற்றவர்கள் என்பதாலும் தங்களது வாழ்வு நிலையை மாற்றிக்கொள்ள திறமையற்றவர்கள் என்பதாலும் ஏழை மக்களும் ஒடுக்கப்பட்ட சாதியினரும் பல வழிகளில் ஏமாற்றப்படுவதை அவர்களுக்கு உணரத்தி மேம்பாட்டை நோக்கிய நகர்வுக்கு அவர்களை அழைத்துச் செல்வதில் பெரிதும் முயன்று சாதித்திருக்கும் சாவித்திரி பாய் பூலே தம்பதியினரின் அன்றைய தீவிரத் தன்மையினை நூல் தெளிவாக எடுத்துரைக்கிறது.

சாவித்திரி மற்றும் ஜோதிபா இடையிலான காதல் எவ்வாறு சமூகத்தின் முன்னேற்றத்தை நோக்கி அவர்களை அழைத்துச் சென்றது என்பதை அவர்களது காதல் கடிதங்கள் விவரிப்பதையும் நூல் எடுத்துக் கூறுகிறது.

பொதுநலத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளத் துடிக்கும் இன்றைய இளைய தலைமுறையினருக்கு நல்லதொரு வழிகாட்டியாகவும் சமூகத்தின் மீதான எவ்வித நலனிலும் அக்கறை காட்டாத மக்களுக்கு சமூகத்தின் மீதான ஈர்ப்பை உணர்த்தி சிறந்த பாதை காட்டவும் இந்த நூல் உதவுகிறது.




திரு இளையவன் சிவா, நரசிங்காபுரம்

## நூல் அனுபவம்

## கட்டுரைகளின் நந்தவனம்

"கவிச்சிகரம்" ஐயா இரஜகை நிலவன் எழுதிய கட்டுரைகளின் நந்தவனத் தொகுப்பில் முதல் மலராக மலர்ந்து மணம் வீசிக் கொணடிருப்பது, ஆசான் தேவநேய பாவாணர் எழுதிய "மொழி நூற்கட்டுரைகள்." ஏறத்தாழ கிமு9-ம் நூற்றாண்டிலிருந்து தமிழ்ச் சங்கங்கள் அமைத்து, தொடர்ந்து தமிழ் இலக்கியங்களை படைத்து வந்தவர்கள் மூத்தகுடி திராவிடத் தமிழர்கள். ஒரு சொல்லின் குறி, பொருள், செயல் சார்ந்து ஒலிக்கப்படுதல் அம்மொழியின் ஆழமான வேர்களை உணர்ந்து கண்டறிய உதவும் சிறப்பம்ச மாகும். இதற்காண ஆராய்ச்சியில் தம் வாழ்வையே அர்ப்பணித்தவர்தான் நமது தாத்தா தேவநேயப் பாவாணர்.




நமது சங்க இலக்கியங்கள் பல்லாயிர மாண்டுகள் முன்பிருந்தே, திராவிடரின் கல்விச் செழிப்பை, நாகரீகத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. காகிதம் கண்டறியா அந்த நாட்களில் தமது மொழிச் செழிப்பை, இலக்கிய வளத்தை ஓலையில் காத்து வந்தார்கள். அன்று அவர்படைத்த இலக்கிய வரைமுறைதான் இன்றும் மாறாமல் செழிப்பேற்றிக் கொண்டிருக்கிற தென்றால், அதுநம் மொழியின் தொன்மையையும், வளத்தையும், நாகரீக வளர்ச்சியையும் தெளிவுபடச் சொல்கிறது. இலக்கணம் பாக்களின் அடிகளில் இசையின் ஓசை அலைகளைப் பாய்ச்சி இனிமை சேர்க்கிற தென்றால், அவை எத்தனை மேன்மையான கட்டமைப்புக்களைக் கொண்டதாக இந்திருக்க வேண்டும். இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட நமது தாய்த்தமிழை அறியாது கிடந்த உலகத்தை, தமது ஒப்பியல் கட்டுரைகள் வழியாக, அதன் உறக்கத்திலிருந்து தட்டி யெழுப்பி, தனித்தமிழை அரங்கேற்றம் செய்த நமது தாத்தா தேவநேய பாவாணருக்கு தமிழினம் தமது சிரம் தாழ்த்தி வணங்க வேண்டியதன் அவசியத்தை ஆசிரியர் எடுத்தாழ்கிறார்.

இவ்வளவு சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த தமிழ்மொழி பின்னாளில் அந்நியர்களின் பலாத்கார படையெடுப்பால் நிலைகுழைந்து, நாகரீகம், கலாச்சாரம் அழிக்கப்பட்டு, துருப்பிடித்துப் போனதெல்லாம், ஆள்வர்க்க மடமையும், வேதி வர்க்க வஞ்சகமும் மறக்க முடியாத சோக சரித்திரம்.

திரு பாவரசு முகிலை திருநாதன், மும்பை

பிறமொழிக் கலப்பால், கலாச்சாரத் திணிப்பால் ஆங்காங்கே திரிபுகள் ஏற்பட்டு, தமிழ்மொழி பதினான்கு மொழிகளைப் பெற்றெடுத்துள்ளது என்கிறார் ஆசிரியர். பிறமொழி, கலாச்சார மாற்றங்களை கலாச்சார குப்பைகள் என்கிறார் ஆசிரியர். எனினும் ஆராய்ச்சியின் வழி தனித்தமிழை தலைதூக்கி நிற்கச் செய்த பெருமை தேவநேய பாவாணரையே சேருமென்கிறார் ஆசிரியர்.

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்ற கட்டுரையில்:

வாழ்க்கையின் முன்னேற்றத்தின் அடிப்படையே நம் குறிக்கோளில் அடங்கியிருக்கிறது. உபயோகப்படாத மூளையும் இயங்காகாத இயந்திரமும் உருக்காத இரும்பும் துருபிடித்துப் போகும் என்பது இயற்கையானதே. எந்தப் பொருளுமே உபயோகப்படும் போது தான் அதனுடைய பயனை உணரமுடியும்".

கனாக்காண் என்ற கட்டுரையில் சொன்னதுபோல, லட்சியத்தை மனதில்ப் பதி, அந்த குறிக்கோளை அடைவதற்கு திட்டமிட்டு செயல்படு, படிப்படியாக முன்னேறு என்கிறார் ஆசிரியர். இந்திய சமூகக் கட்டமைப்பு, அதன் தரந்தாழ்ந்த கொள்கைக் கோட்பாடு, மதியடைப்பு, திணிக்கப்பட்ட பொருளாதார, சமூக கோட்டைபோல் முன்னிற்கும் தடைகளைப் பற்றி, சமவாய்ப்பின்மை பற்றி ஆசிரியர் கண்டுகொள்ளவில்லை. எல்லாம் நன்றாகவே நடந்தது, நடக்கிறது, நடக்கப்போகிறது என்ற நேரிய அடிப்படையில் ஆசிரியரின் கண்ணோட்டம் அமைந்துள்ளது.




வாழ்க்கை என்பது கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுர டானதுதான். வாழ்க்கை என்பது போராட்டம்தான். இருந்தாலும் நாம் நமது பாகத்தை இந்த வாழ்க்கையென்ற மேடையில் நடித்துத்தா னாகவேண்டும் என்ற உண்மை நிலைபாட்டை வெளிக்காட்டுகிறார்.

திரு பாவரசு முகவை திருநாதன், மும்பை

## நூல் அனுபவம்

## கட்டுரைகளின் நந்தவனம்

ஆசிரியரின் நந்தவனத்தில் கடைசிப் பூவாக மலர்ந்திருப்பது சமாதானப் புறாவாக வாழ்ந்து வன்மை வேதாந்திகளால் சித்ரவதை செய்யப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்டு உயிர்த்தெழுந்த இயேசுபிரான் பற்றிய கட்டுரைதான். உலகின் எந்த மூலையானாலும் வன்மைதான் கோலோச்சுகிறது, வலிமைமிக்க ஆளினமே விதி சொல்கிறது, மதத்தின் பெயரில் மடமே இவர்களை ஆள்கிறது என்பதென்னவோ உண்மைதான். இருந்தாலும் ஆசிரியரின் நேர்கொண்ட நோக்கும், நேர்மை போற்றும் போக்கும், ஆக்க சிந்தனையும், உலகத்தோடொட்டி ஒழுகலும் ஆக்கபூர்வமான கருத்துகளை, அறிவுரைகளை வழங்குவதில் குறைவைக்கவில்லை. மேலும்பல நீதிநெறி வாழ்வியல் கட்டுரைகள் படைத்து வழிகாட்டுதலை மானிடத்திற்கு தந்துதவ வாழ்த்துகிறேன்.




*திரு பாவரசு முகவை திருநாதன், மும்பை*

# செய்குத்தம்பி பாவலர்

கட்டுரை

## முன்னுரை



தொடர்பில்லாத பலதரப்பட்ட நிகழ்வுகளை ஒரே சமயத்தில் நினைவில் வைத்துக்கொள்வது 'அவதானம்' அல்லது 'கவனகம்' என்றும் சொல்வார்கள். ஒருவர் ஒரு சமயத்தில் 10 விஷயங்களை செய்துகாட்டினால் 'தசாவதானி'. 32 விஷயங்களை செய்துகாட்டினால் 'சோடஷாவதானி'. 100 விஷயங்களை செய்துகாட்டினால் 'சதாவதானி' (சதம் என்ற சமஸ்கிருத சொல்லானது தமிழில் நூறு என்ற எண்ணை குறிக்கும்).

அப்படி 100 செயல்களைச் செய்தவர் யாரென்று சரித்திரச் சான்று தெரியுமா? அவரே சதாவதானி செய்குதம்பிப் பாவலர்.

## இளமைப் பருவம்

நாஞ்சில் நாட்டு கோட்டாறு பகுதியில் இடலாக்குடியில் அமீனா அம்மையாருக்கும் பக்கீர் மீரான் சாகிபுக்கும் மூன்றாவது மகனாக 1874 ஜூலை 31-இல் பிறந்தார்.

அக்காலத்தில் திருவிதாங்கூர் மன்னர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாஞ்சில் நாட்டில் மலையாளப் பள்ளிகளே நடந்து வந்தன. பிற்காலத்தில் மிகச் சிறந்த தமிழ்ப் புலவராக விளங்கிய செய்குதம்பி இம்மலையாள மொழிப் பள்ளியில் படித்துத் தேர்ந்தது வியப்புக்குரியது.

## தமிழ் ஆர்வம்

இடலாக்குடியை அடுத்த பட்டாரியார் வீதியில் சங்கரநாராயண அண்ணாவி என்பவரிடம் முறையாகத் தமிழ் கற்றார். இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சியுற்றார். காளமேகப் புலவர், மாம்பழக்கவிச்சிங்க நாவலர் போல அந்தாதியாகவும் சிலேடையாகவும், யமகம், திரிபுகளாகவும் கவிபுனையும் கலை கைவரப் பெற்றார்.

அ வில்சன்
இதழாசிரியர்

## இலக்கியப் பணி

ஞானியார் அப்பாவின் 'மெய்ஞ்ஞானத் திருப்பாடல் திரட்டு' என்னும் நூலை அச்சிட சென்னை 'இட்டா பார்த்தசாரதி நாயுடுவுக்குத்' தமிழறிந்த இஸ்லாமியர் தேவைப்பட்டார். சென்னைச் சென்று அந்நூலைச் சிறப்புடன் பதிப்பித்தார் செய்குதம்பிக்கு, அப்போது வயது 21. அவரது அறிவாற்றலைக் கண்டு ஸ்ரீபத்மவிலாசப் பதிப்பகத்திலேயே பிழை திருத்தும் புலவராக அவரை அமர்த்திக் கொண்டனர். மாதம் ரூ 60/- ஊதியமும் பிற வசதிகளும் செய்து கொடுத்தனர். அவர் வறுமையை மறந்து வாழத் தொடங்கிய காலம் இதுவே. இக் காலத்தில்தான் சிந்தையள்ளும் சிறந்த காப்பியமாகிய சீறாப்புராணத்துக்குச் சீரிய உரையெழுதிப் பதிப்பித்தார். உரை எழுதுதல், பாட்டெழுதுதல், பதிப்பித்தல் மட்டுமின்றித் திருக்குறள், கம்பராமாயணம், சீறாப்புராணம் பற்றிய இலக்கியச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார்.

## சதாவதானி செய்குத்தம்பி

சென்னையில் 10.03.1907ல் விக்டோரியா மண்டபத்தில் புலவர்கள் அறிஞர்கள் மிகுந்த அவையில், இவரின் தசாவதானி நிகழ்ச்சிக்கு வந்த அறிஞர்களை, இவர்களின் 100 வித நினைவாற்றல் நிறைந்த திறமையைக் கண்டு அசந்தே போனார்கள். அப்போது செய்குத்தம்பி பாவலருக்கு வயது என்ன தெரியுமா? வெறும் முப்பத்து மூன்று மட்டுமே!

## இயற்றிய நூல்கள்

1. நபிகள் நாயக மான்மிய மஞ்சரி, 2. திருக்கோப்பற்றுப் பதிஞ்சம், 3.பத்தந்தாதி, 4. திருமதினந்தந்தாதி, 5.கோப்பந்துக் கலம்பகம், 6.கோப்பந்துப் பிள்ளைத் தமிழ், 7.கவ்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, 8.நீதி வெண்பா, 9.ஷம்சுத்தாசின் சேவை போன்ற கவிதை நூல்களையும்,
1. தேவலோக பழிக்குள்ள வழக்கு,2. வேதாந்த விபசார பழிக்குள்ள வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியவர்.

## இயற்றிய நூல்கள்

1. தேவலோக பழிக்குள்ள வழக்கு,2. வேதாந்த விபசார பழிக்குள்ள வழக்கு போன்ற வசன நடை காவியங்களையும் எழுதியவர். 'யதார்த்தவாதி', 'இஸ்லாமிய மித்ரன்'னு ரெண்டு பத்திரிகைகளையும் நடத்தியுள்ளார்.

## விடுதலைப் போராட்ட விருப்பும் வெறுப்பும்

ஆங்கிலேயர் ஆட்சியினை எதிர்த்துச் சுதந்திரப் போராட்டத்திலும் கலந்துகொண்டார். 1920 நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் தொடங்கியபோது அவர் கதருடைக்கு மாறினார். அந்நாளில் நடந்த பெரும்பாலான கூட்டங்கள் பாவலர் தலைமையில் நடந்தன. ஜீவா, திரு.வி.க. மாதிரியான தலைவர்கள் பாவலர் பேச்சுக்கு ரசிகர்களாக இருந்துள்ளார்கள்.

பாவலர் தேசிய விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டதால் சிலர் வெறுப்பும் கொண்டனர். நாகர்கோயில் பகுதியில் பேருந்து அதிபராக இருந்த ஒருவரின் பேருந்துகளில் பாவலர் எங்கும் எப்பொழுதும் இலவசமாக ஏறிச் செல்லும் உரிமைதந்து சிறப்பிக்கப்பட்டிருந்தார். அவரது விடுதலைப் போராட்டத்தின் காரணமாகத் தமது வண்டியில் போவதற்குத் தடை விதித்தார் அவர்.

## இறப்பும் இரங்கலும்

1950 பிப்ரவரி 13-இல் பாவலர் காலமானார். அறிஞர் பலரும் கலந்து கொண்ட அந்த இரங்கற் கூட்டத்துக்குக் கவிமணிதேசிக விநாயகம் பிள்ளை தலைமை தாங்கினார்.



## நாளை நமதே

# பணத்தால் சாதிக்க முடியாததை கூட, முயற்சியால் சாதித்து காட்ட முடியும்


**அகர முதல இலக்கிய பேரவை**

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே

முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com